26 MAY 1955

பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P. S. வேலுசாமி   வியாழன் வெளியீடு.

போர் 1   பொள்ளாச்சி.   1—11—51.   விலை அரையணா.   4-பக்கம்.   வெற்றி 3

தேர்தல் பாட்டு.

மகாஜனங்களே — மகாஜனங்களே — வரும்
தேர்தலிலே காங்கிரஸுக்கு
வோட்டுப் போடுங்கோ
வயது வந்தவர் — அனைவோரும்
வோட்டுப் போடுங்கோ
காங்கிரஸ் பெட்டி
எது என்று கேட்டுப் போடுங்கோ (மகா)
மஹா மாரியம்மன் பக்தர்
ஏ. பி. டி. கவுண்டர் புத்ரன்
மஹாலிங்கக் கவுண்டருக்கே
வோட்டுப் போடுங்கோ
வாழ்கவே நீடூழி என்று
ஜெய் கோஷம் கிளப்பிக்கொண்டு
வாய் நிரம்ப நல்லுறுதி கேட்டுப்
போடுங்க (மகா)

வாய்மை — செல்வம் பெருந்தன்மை
தாய் தந்தை குடிப் பிறப்பு
வாலிபந் திரண்டெழுந்த
வேளாள சிங்கம்
மஹா பொறுமை, சாந்தம், ஈகை
வயது கல்வி நிறைந்த உள்ளம்,
மஹாலிங்கக் கவுண்டருக்கே
வோட்டுப் போடுங்கோ (மகா)

ஜில்லாப்போர்டு நிருவாகத்தில்
நல்லாப் பேரு பெற்ற சீமான்
சீர்த்திமான் — வி. கே. பி.
கவுண்டர் ஜோடி சேரட்டும்
செல்வப் பொருளாச்சி
தாலூக்காவின் சேம லாபங்களை
சென்னை சர்க்கார் காதிலே
எடுத்துக் கூறட்டும் (மகா)

மிக்கவே பொள்ளாச்சி வாசி
பத்திரிகைப் பிரசுரம்
வேலுசாமி வெளியிடும் வாரப்பதிப்பு
தக்க பூமி பாலகதாஸ்
புதுக் கம்பன் வாழ்த்துக்கவி
சர்க்கரைக் கட்டித்தமிழ்
சுவைத்துப் பாருங்கோ (மகா)

தேர்தல் மேடை.

காங்கிரஸின் வெற்றி எங்கும் எதிர்பார்க்கப்படுகிறது

ஸ்ரீ மகாலிங்கத்திற்கு மகத்தான ஆதரவு.

தேர்தல் நெருங்க, நெருங்க மக்கள் உள்ளத்திலே இன்று அலை அலையான எண்ணற்ற எண்ணங்கள் ஏற்பட்டு, யார் ஆட்சிக்குவந்தால், நாம் நம் நாடு நல்லமுறையில் வாழும் வாழ முடியும் வாழச்செய்வார்கள் என்று எங்கு நோக்கினும் இன்று பேசப்பட்டுவருகிறது! இன்றைய தேர்தலிலே எத்தனையோ கட்சிகள் போட்டியிட்டு ஆட்சி என்னும் அப்சரசை ஆட்கொள்ளவேண்டுமென்று நாடு முழுவதும் தங்கள் கொள்கைகளைப் பரப்பி வருகின்றனர். ஆனால் காங்கிரஸைத் தவிர எல்லா, கட்சிகளும் ஒரே விதமான கொள்கைகளையே மக்கள் முன் வைக்கின்றனர்! இதனை மக்கள் எல்லாம் ஒரேவிதமாக இருக்கிறதே எந்தசாயம் கெட்டிச்சாயம் என்று தெரியாமல் ஒன்றும் புரியாமலும் திகைக்கின்றனர் இதே நேரத்தில் காங்கிரஸ் அபேட்சகர்கள் என்ன செய்கிறார்கள் என்றும் அவர்களுடைய திட்டமென்ன என்று மக்கள் ஆவலுடன் எதிர் நோக்குகின்றனர். ஆனால் நம் நகரை பொறுத்த மட்டிலும் எடுத்துக்கொண்டால் கோவை ஜில்லா இளைஞர் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ என். மகாலிங்கம் அவர்கள் மக்களிடையே நேரிடையாகச் சென்று தொடர்புகொண்டு மக்கள் எண்ணங்களை அறிந்தும் வருகிறார்! இது வரவேற்க வேண்டியதே! இன்னும் இவர் பல முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார். காங்கிரஸ் வெற்றிக்காகவும் மக்களின் நன்மைக்காகவும் அல்லும்பகலும் ஓய்வில்லாமல் சேவைக்காக துடித்துக்கொண்டு பாடுபட்டு வருகிறார். ஆனால் இன்று நம் நகரில் ஒவ்வொருவரும் பேசுவது என்ன? ஸ்ரீ மகாலிங்[கம்] பணக்காரர் தான், ஆனால் பணச் செரு[க்கற்றவர்], கற்றவர், புத்திசாலி, புதுமைவழிகாட்[டி] படித்து பி. எஸ். சி. பட்டம் பெற்றவ[ர்] இளைஞர்களின் முற்போக்கு எண்ண[ங்]களை ஆதரித்து ஊக்கமளிப்பவர். இவ[ர்] எம். எல். ஏ. யாக வந்தால் நாட்டிற்கு[ம்] மக்களுக்கும் நல்ல முறையில் பணியாற்[று]வார், திறமை, யோக்கியம் எல்லாம் இ[ரு]க்கிறது என்று பேசப்படுகிறது. ஆ[னால்] ஸ்ரீ மகாலிங்கம் இனிமேல், தன்னுடை[ய] திட்டங்களை நல்ல முறையில் மக்களி[ன்] முன் வைக்கவேண்டும். அத்திட்டங்க[ள்] மக்களின் எண்ணங்களாகப் பிரதிபலிக்[க] வேண்டும்! முக்கியமாக விவசாயத்தொ[ழில்]களைப்பற்றியும், தொழில்முறை, அதி[க] தேசியமயமாக்கும் முறையைப் பற்றியு[ம்] சமூக சீர்திருத்தம் பற்றியும், பொதுவா[க] ஏன் விளக்கமாக மக்கள்முன் வைக்கவே[]ண்டிய பிரச்சனைகளில் வேலையில்லா[த்] திண்டாட்டத்தை ஒழிக்கும் முறை[] முக்கியமானது! ஆகையால், இவர் ம[க்கள்] முன் மக்களின் எண்ணங்களை உணர்[ந்து] அதற்குத்தகுந்த ஆக்க வேலைகளை மக்[கள்] முன் செய்துகாட்டவேண்டுமென்று எ[தி]ர்பார்க்கப்படுகிறது.

24-ம் தேதி மாலை நகர ஆண்கள் உயர்நிலை[ப்] பள்ளியில் மாணவர் இலக்கிய மன்றத்தி[ன்] சார்பில் ஆசிரியர் ஸ்ரீ சுந்தரமூர்த்தி ஐய[ர்] தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்[றது.] ஐ. நா. வின் முக்கியத்தைக்குறித்து ஆசி[ரி]யர் எஸ். வி. குருஷ்ணமூர்த்தி ஐயரும் [] மாணவர்களும் பேசினார்கள்.

காங்கிரஸ் பெட்டிக்கே வோட் செய்யுங்கள்!

செல்வாக்கு மிகுந்த தமிழ்
வாரப் பத்திரிகை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 1—11—51. வியாழன்.

ஆதரவில்லையேல் விலகிவிடுங்கள்.

சென்னை சட்டசபைக்கு காங்கிரஸ் பேக்ஷகராக சிபார்சு செய்யப்பட்ட நப ள் நமதுஜில்லாவில் தேர்தல்வேலையை ரம்பித்து விட்டனர். நமது ஜில்லாவில் ரு இடத்தில் காங்கிரஸ் அபேக்ஷகராக பார்சு செய்யப்பட்ட ஒருவர், தேர்தல் வலையை ஆரம்பித்து பல இடங்களுக்கு சென்ருராம். அவருக்கு ஆதரவில்லை ன்பதை நன்கு உணர்ந்து கொண்டு, ான் நிற்பதில்லை என்றும், தனது தொ திக்கு வேறு அபேக்ஷகரை போட்டுக் ாள்ளும்படியும் தேர்தல் போர்டுக்கு ...விட்டாராம். வீண் போலி கௌர பாராட்டாது உண்மை நிலைமையை ணர்ந்து விலகி விட்டதற்கு நாம் பாரா டுகிறோம்.

அதேபோல் செல்வாக்கு இல்லாத ள் விலகி விடுவதே மேல். தங்களுக் செல்வாக்கு இல்லாத காரணத்தால் ரஸிற்கு தோல்வியை உண்டாக்க ண்டாம் இப்போதே அபேக்ஷகர்கள் ரவு தேடுவதற்கு தங்கள் தொகுதிக ல் பல இடங்களுக்குச் செல்கின்றனர். ங்காங்கு எந்த மாதிரியான ஆதரவு இரு து என்பதை உணந்து பொதுஜன தரவற்றவர்கள், டில்லியிலிருந்து முடி ன ஜாப்தா வெளியாகுமுன் விலகிவிடு த நலம். இதைச்செய்ய தைரியம் ண்டும் தங்கள் சொந்த மரியாதையை காங்கிரஸின் அந்தஸ்தை உயர்த்த ண்டும், காங்கிரஸ் தோல்வி அடைய க்கூடாது என்ற எண்ணம ஒவ்வொ வருக்கும் வேண்டும்.

குருவி ஜோசியம்.

இந்த வாரம் குருவி தமிழ்நாடு தேர்தல் போர்டாருக்கு இருந்த தலைவலி தீர்ந்து விட்டது என்று குருவி ஜோசியம் சொல்லுகிறது. தலைவலிக்குக் காரணம கோவை பிரமுகரை எந்தத்தொகுதியில் நிறுத்துவது என்பதுதாஹம். இப்போது கோவைப் பிரமுகரை கோவை டவுன் தொகுதியில் நிறுத்துவது என்று முடிவு செய்யப்பட்டிருப்பதாகக் குருவி ஜோசியம் சொல்லுகிறது. இதாவது நிச்சயம் தானு? என்று ஒரு நண்பர் குருவியை கேட்கிருர். இப்போது தலைவலி மத்திய தேர்தல் போர்டாருக்குப் பிடித்திருக்கிறது. அந்தத் தலைவலி தீர்ந்தபின்தான் நிச்சயம் என்று சொல்ல முடியும் என்று குருவி ஜோசியம்சொல்லுகிறது. கோவை டவுன் தொகுதிக்கு கோவைப்பிரமுகரை போட்டிருப்பதை எதிர்த்து மத்திய தேர்தல் போர்டுக்கு அப்பீல் செய்யப்பட்டிருக்கிறது. அப்பீல் செய்திருப்பவர்கள் பல காரணங்கள் பல குறைகள் சொல்லி அப்பீல் செய்யலாம் ஆனுல் அதெல்லாம் தமிழ் நாட்டின் தனிப்பெரும் தலைவர் ஸ்ரீ காமராஜ் மத்திய தேர்தல்போர்டிலும் இருக்கும் போது என்னவரும் என்று தெரியாதா? என்று குருவி ஜோசியம் சொல்லுகிறது. தமிழ்நாடு தேர்தல்போர்டின் முடிவில் எந்த மாறுதலையும் செய்ய மத்திய தேர்தல் போர்டுக்கு தைரியம் இருக்காது என்று குருவி இன்றேஜோசியம் சொல்லுகிறது.

ரேஷன் அட்வைசரி கமிட்டிக் கூட்டம்.

19—10—51ல் தலைவர் ஸ்ரீ பி. கே தர்மலிங்கக் கவுண்டர் தலைமையில் ரேஷன் அட்வைசரி கமிட்டிக் கூட்ட்ம்நடைபெற்றது. ரேஷனிங் ஆபீஸர், ரேஷன் சம்மந்தப்பட்ட விபரங்களை எடுத்துக்கூறினுர். தீபாவளிக்கு அதிக சர்க்கரை கொடுக்கும்படியும் தற்போது போடப்படும் அரிசி சரியில்லை என்றும் நல்லஅரிசி போடஏற்பாடு செய்யும்படியும் தீர்மானங்கள் முடிவு செய்யப்பட்டன.

ரேஷன்ஷாப்புக்காரர்கள் கவனிக்க!

நம் நகரிலுள்ள ரேஷன்ஷாப்புகளில் சில்லரை கொடுத்தால் வாங்குவதில்லை என்ற புகார்கள் நீண்ட நாட்களாக வந்து கொண்டிருக்கிறது, ஏழைமக்களும், கூலி வேலை செய்பவர்களும்தான் பெரும்பாலும் சில்லரை கொண்டு வருவார்கள். அதை வாங்க மறுத்தால் நோட்டாக்கொண்டுவர அவர்கள்எங்கேபோவார்கள். என் வேசில்லரை வாங்க மறுப்பதுநியாயமில்லை. இனிமேல் இம்மாதிரியான புகார்களுக்கு இடம் கொடுக்காதீர்கள். இனிமேல் எங்கள் வாசிக்கு புகார் வந்தால் அதை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி விடுவோம்.

வரப்போகும் தேர்தலில் நாம் செய்யவேண்டுவது என்ன?

நாளது 4-11-51 ஞாயிறு மாலை 4-மணிக்கு மார்க்கட்ரோட்டில் நாராயணு டாக்கீஸிற்கு மேல்புறமுள்ள டி. வி நாராயண செட்டியார் மெத்தைக்கட்டிடத்தில் ஒரு கூட்டம் நடைபெறும். அதுசமயம் வரப்போகும் தேர்தலில் நாம் செய்யவேண்டியதுஎன்ன? என்பதுபற்றி யோசனை செய்து முடிவு செய்ய வேண்டியிருப்பதால் அனைவரும் தவருது விஜயஞ்செய்ய வேண்டுமாய் நகர காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ எம் ராமசாமி அவர்கள் தெரிவிக்கிருர்.

பாராட்டு விருந்து.

12 ம் தேதி சென்னை மாகாண பல் வைத்திய கவுன்சிலுக்கு மெம்பராகத்தேர்ந்தெடுக்கப்பட்ட நம் நகர பல் வைத்தியர் ஸ்ரீ கே. ஒ. சந்திரன் அவர்களைப்பாராட்டும் வகையில் ஸ்ரீ கே. முத்துசாமிக் கவுண்டர் ஸ்ரீ பொன்னுசாமிக்கவுண்டர் ஆகியோர் ஒரு சிற்றுண்டிவிருந்து அளித்தனர். ஸ்ரீ என். மகாலிங்கம் தலைமை வகித்தார் நகரபிரமுகர்கள் உத்தியோகஸ்தர்கள் மற்றும்பலர் கலந்துகொண்டனர்.

வரப்பெற்றோம்.

கோவையிலிருந்து வெளிவரும்
"கூட்டுறவு மகாநாட்டு மலர்."
"நம் செய்தி" தீபாவளி இதழ்.
"கோவைக்குரல்" தீபாவளி இதழ்.

தபால் பெட்டி நெ. 25.

N. B. ரெடிமேடு பவுன் நகைகள் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

Prop. B. பாலமாணிக்கம் செட்டியார் & பிதர்ஸ்,

நகர ஒலி பரப்பு நிலயம்.

நவம்பர் 3-சனி மாலே 7-க்கு திரைப் தண்ணீர் விநியே... திரைக்கண்ணு. 4-ஞாயிறு வாராந்திரச்செய்தி, சேதுராமசாமிச்ச... டர், 5-திங்கள் 6-30க்கு குறள் விளக்கம், சிவகுருநாதபிள்ளே. 6-... வாய் 7-க்கு பொதுநல மனப்பான்மை, மரியதாஸ், 7 புதன் 5-30 ...ரினெட், நடராஜன், 8 வியாழன் 7 கம்பராமாயணம், மாரிசெட்ம...

கேள்வி—பதில்.

கே; ஸ்ரீ என். மகாலிங்கம் அவர்கள் தேர்தலில் வெற்றி ...ருல் நமது நகரத்தில் வேலையில்லாமல் திண்டாடும் பாட்ட... மக்களுக்கும் படித்து வேலையில்லாமலிருக்கும் மாணவர்களு... வேலைகொடுத்து ஆதரிப்பாரா? அல்லது மேலும் அவரு... இனத்தாருக்கு மாத்திரம் வேலை கொடுப்பாரா? (டி ரங்க...

ப: எல்லோருக்கும் வேலைகொடுத்து ஆதரிக்க மு... யோசிக்க வேண்டியது உங்கள் பொறுப்பு! வேலையின்மை ... முயற்சி செய்வார் என்பதுமட்டும் நிச்சயம். இதுவரை தன் ... தாரை மட்டும் ஆதரித்தாகத் தெரியவில்லை.

கே: செல்லம் டாக்கீஸில் படம் பார்க்கும் பொழுது ... கிரஷ் விற்பவர்களின் தொந்திரவு அதிகமாயிருக்கிறது இ... தியேட்டர்காரர் கவனிப்பதில்லை. (எஸ். ராம...

ப: அந்தத் தியேட்டரில் இது மட்டும் தானு! இன்னும் ...ஊழல்களைப்பற்றி பல நேயர்கள் எழுதியுள்ளனர். அவை... ...றவில் வெளியிடுவோம்.

கே; நம் நகரில் எத்தனை முட்டாள்கள் இருக்கிறார்கள் என்று உம்மால் சொல்லமுடியுமா?

(கே. ராமன்.)

ப: உம்மையும் சேர்த்துத்தானே கேட்கிறீர்கள்.

கே: இக்காலத்தில் வாலிபர்களிடத்தில் திடீர் காதல் ஏற்படக்காரணம் என்ன?

(பி. ராஜாம்பாள்)

ப: இக்காலத்துப்பெண்கள் அதிகமாக சிங்காரித்துக்கொண்டு திரிவதால் தான்.

கே. இனிய வார்த்தைகளினுல் வயிறு நிறையுமா?

(ஜி, எம். சுசிலா)

ப: இல்லை! வெறுங்கையுடன் திரும்பத் தான் செய்ய முடியுமா

கே; வாலிப... ம...பியா?

(பி ...னிவாசன்)

ப: பைத்தி

கே: அண்ணை பொய் சொல்வது பாபமா?

(... ...)

ப, உண்மையை சொல்லாமலிருப்பதுதான் பாபம் தங்கச்சி!!

கே: பெண்களைப் பெரிய பொ...ம்என்கிருர்களே இது சரியா?

(டி. எஸ். அழகேச...)

ப- இதெல்லாம் அழகும்வாலி... உள்ள வரைக்கும் தான்!!

கே- காதல் மணம் புரிந்து... டால் எப்படி இருக்கும்?

(பி. டி. சு...)

ப- தம்பதிகள் விவாக ரத்து... அதிக நாட்கள் காத்துக் கொண்டு... அவசியமிருக்காது.

வீடு விற்பனை.

எனக்கு சொந்தமான திலகர் ...ருக்கும் 3-ம் நெம்பர் வீடு விற்பனை...யப்படும் தேவையுள்ளவர்கள் விசாரிக்கவும்.

சி. ரங்கசாமி,
3, திலகர் வீதி, பொள்...

வீடு விற்பனை.

வெங்கட்டரமணய்யர் வீதியில் 1... 58 நெ, வீடுகள் சகல வசதிக... கூடியதுவிற்கப்படும். தேவையுள்ள... நேரில் பார்த்து பேசி முடித்துக்கொ...லாம். பகிரங்க விற்பனை தேதிவிவர... நோட்டீஸில் காண்க.

M. பாலசுப்ரமணியம், பொள்...

சந்திரன் காலேஜ் ஸ்கூல்.

298, இடையர் வீதி, கோயமுத்தூர்.

ஒரு வருஷத்தில் 14-வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண்கள் E. S. L. C க்கும் 20-வயதிற்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும் 9-ம் வகுப்புவரை ஹைஸ்கூல்களிலும் சேரலாம். S.S.L.C இண்டர் வகுப்புகள் உண்டு. ஹாஸ்டல் உண்டு.

தலைவர்:— S. R. Chandran.

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட் &
A, C. C. நீலகிரி பிராண்டு
சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்,
S. நாகமாணிக்கம்செட்டியார் & பிரதர்,
போன் நெ. 85.
கடை வீதி & மார்க்கட் வீதி.

R. M. D. C. Col. No. 1256.
எம்மிடம் புதன், வியாழனில் பூர்த்தி செய்த கூப்பன் பெற்றுக் கொள்ளப்படும். T. S. ஆறுமுகம்,
S. M. ஜோசியர் சந்து,
பொள்ளாச்சி.

கவுண்டர் & கம்பெனி

லிமிடெட்,

கூட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

போர்டு; செவர்லெட்

இதர மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,

டயர், டியூப்புகள், பேட்டரி வகைகள்

விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன்,
எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும்
செய்து கொடுக்கப்படும்.

குயிலின் குரல் இனிமையானது!
ஆனால் அதைவிட இனிமையானது

பல்லடம்
குயில் மார்க் பீடிகள்

காரம், மணம், குணம் ஒருங்கே அமையப்பெற்ற

குயில் மார்க் பீடிகள்

எங்கும் கிடைக்கும்.

Prop: P. A. ரஹீம் சாயபு.

பல்லடம்.

ஏஜண்டு:

A. K. யாகூப் சாயபு, பொள்ளாச்சி.

தீபாவளி முதல் கோவை கர்னடிக்கில் தினசரி 3-காட்சிகள்.

சீர்மிகும் சீர்திருத்தக் கதை!
சிங்காரமான பாட்டு!!
கருத்துமிகும் களிப்பு வசனம்!!!
நேஷனல் புரொடக்ஷன்ஸ்.

சிங்காரி. (தமிழ்.)

நடிகர்கள்:
லலிதா — பத்மினி, ராகினி, டி: ஆர். ராமச்சந்திரன்,
வி. கே. ராமசாமி, டி. பாலசுப்ரமணியம், சகஸ்ரநாமம்
மற்றும் பலர்.

கோவை — நீலகிரி ஜில்லா உரிமைக்கு:—

கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட்,

ராஜா வீதி, கோயமுத்தூர்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi